## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.33 /2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு நவம்பர் மாதம் 17 -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 17.11.2023**

**பெயர் - விநாயகமூர்த்தி**

**த/பெ - கோவிந்தசாமி**

**வயது - 70**

**சாட்சி - PW1**

**ஊர் - பட்டமந்திரி கிராமம், பொன்னேரி**

**தொழில் - ஓய்வில் உள்ளேன்**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.47 p.m.**

**முதல் விசாரணை -**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1) 24.11.1994 தேதியிட்ட அசல் கிரயப்பத்திரம் ஆவண எண் 2938/1994 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது **(வா.சா.ஆ 1)** எனவும்

(2) 25.09.2017தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆவண எண் 4915/2017 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ 2)** எனவும்,

(3) புல எண் 434/10 மீஞ்சூர் கிராமத்திற்குரிய கணினி வழி எடுக்கப்பட்ட பட்டா எண் 6690 **(வா.சா.ஆ 3)**

**(குறுக்கு விசாரணைக்கு வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம் – 12.55 p.m.**